*Kalanjiyam International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed quarterly academic research journal*
ISSN: 2456-5148 (Online)
www.ngmtamil.in

களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
: https://doi.org/10.63300/kijts10sp02.2026

Vol. 10 No. 02, September 2026 (Special Issue) p54-66 | Available online at: www.ngmtamil.in
*Original Research, Paper – Peer Reviewed*

# எட்டுத்தொகை வழி அறியலாகும் சங்ககால தலைவியின் ஆளுமைப் பண்பு

**The personality traits of the Sangam-era heroine as revealed through the Ettuthogai anthology.**

**முனைவர் பெ. தீபா,**
துறைத்தலைவர் தமிழ்த்துறை,
வைஸ்யா கல்லூரி, சேலம்.
மின்னஞ்சல் முகவரி: kaveeswar@gmail.com

**Abstract**

Personality is not a trait exclusive to men; it is a quality possessed by women as well. The ability to initiate a task and bring it to a successful conclusion is a distinct aspect of the female personality—a trait women have embodied since the Sangam era. An exemplary female leader strives for success in all her endeavors. Sangam literature, specifically the Ettuthogai (The Eight Anthologies), beautifully portrays the numerous successes achieved by women of that period. This research paper examines and elucidates the multifaceted personality of the Sangam woman through the Ettuthogai—highlighting her traits across various contexts: from the successful realization of marital goals to the pursuit of personal objectives, and demonstrating qualities such as courage, innate instincts, the capacity for cooperation, steadfast adherence to principles, communication skills, and the ability to articulate emotions.

**ஆய்வுச் சுருக்கம்**

ஆளுமைப் பண்பு என்பது ஆண்களுக்கு மட்டுமே உரியதன்று. அது பெண்களுக்கும் இருக்கும் குணம். எந்தவொரு செயலையும் தொடங்கி அதனை வெற்றிகரமாக முடிப்பது என்பது பெண்களின் தனி ஆளுமையாக அவர்களால் சங்ககாலம் முதலே கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. ஒரு சிறந்த தலைவி என்பவள் தான் செய்யும் செயல்கள் அனைத்திலும் வெற்றியை அடைய வேண்டும். சங்ககாலத் தலைவிகள் தங்கள் வாழ்வில் எண்ணற்ற வெற்றிகளைக் குவித்துள்ளதை சங்க இலக்கியமான எட்டுத்தொகை மிக அழகாகப் படம்பிடித்துக் காட்டுகின்றது. சங்ககால் மக்கள் தங்கள் திருமண இலக்கை வெளற்றிகரமாக முடிப்பதில் தொடங்கி, தன் இலக்கினை அடைவதில் மாறுபட்ட இயல்பினை வெளிப்படுத்துதல், துணிவு, இயல்பூக்கங்கள், ஒத்துழைக்கும் ஆற்றல், கொள்கைவழி நிற்கும் திறன், தகவல் பரிமாறும் திறன், தன்னுடைய உணர்வை வெளிப்படுத்தும் ஆற்றல் என்று அனைத்திலும் தலைவியின் ஆளுமை இருந்துள்ளது என்பதைச் சங்க இலக்கியங்களுள் ஒன்றான எட்டுத்தொகை வழி ஆராய்ந்து விளக்குவதாகவே இந்த ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

© 2014 The Author(s). This open access article is distributed under a Creative Commons Attribution (CC-BY) license

**குறிப்புச் சொற்கள்**

காப்புணர்ச்சி - இயல்பூக்கம் - வாழத்தூண்டும் இயல்பூக்கம் - இறப்பு இயல்பூக்கம் – காமநோய்.

**ஆய்வு அனுகுமுறை**

சங்ககாலத் தலைவி ஆண்களுக்கு நிகராக எடுத்த காரியங்களை வெற்றியடையச் செய்யும் ஆளுமைத் திறன் பெற்றிருந்தாள் என்பதைச் சங்க இலக்கியங்களில் ஒன்றான எட்டுத்தொகை வழி எடுத்துக் கூறியுள்ளதால் இந்தக் கட்டுரை எடுத்துக்கூறும் முறை ஆய்வில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

தலைவிக்கு தினைப்புனம் காப்பது மட்டுமே பணி. அதைத் தாண்டினால் காதல் செய்வாள். வேறுஏதும் அவளுக்குத் தெரியாது என்ற நிலையில் சங்ககாலப் பெண்கள் வாழவில்லை. ஒரு பெண் தலைவி என்ற நிலைக்கு உயரும்போது அவளிடம் தன்னுடைய வாழ்க்கை வெற்றிக்குத் தேவையான பல்வேறு வகையான ஆளுமைப் பண்பு இருந்துள்ளது என்பதை எட்டுத்தொகை வழி ஆராய்ந்து எடுத்துரைப்பதே இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

சங்க இலக்கியங்களில் ஒன்றான எட்டுத்தொகை நூல்களின் வழியாகச் சங்ககாலத் தலைவியின் ஆளுமைப் பண்புகள் மிக உயர்வாகவும், போற்றத்தக்கதாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவள் வெறும் குடும்பப் பெண்ணாக மட்டுமின்றி, தற்காலப் பெண்களுக்கு இணையான மனவலிமையும் சுயமரியாதையும் கொண்டவளாக வாழ்ந்துள்ளாள். சங்ககாலத் தலைவியின் ஆகச்சிறந்த ஆளுமையாகக் கருதப்படுவது அவளது கற்புப் பண்பு ஆகும். இது கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது மட்டுமல்ல, எத்தகைய இக்கட்டான சூழ்நிலையிலும் தன் கணவன் மீதான அன்பிலும் நெறியிலும் உறுதியாக இருப்பதாகும். தலைவன் பொருள் ஈட்டவோ அல்லது போருக்கோ பிரிந்து சென்றிருக்கும் நீண்ட காலத்தில், பிரிவைத் தாங்கிக் கொண்டு, மன வலிமையோடு இல்லறத்தைக் காக்கும் ஆளுமை அவளிடம் இருந்தது. குடும்பத்தை வழிநடத்தும் சிறந்த இல்லறத் தலைவியாக (இல்லத்தரசி) அவள் திகழ்ந்தாள். வறுமை வந்த காலத்திலும் கூட, அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் சுற்றத்தாரையும் விருந்தினரையும் உபசரிக்கும் உயர்ந்த ஆளுமை அவளுக்கு இருந்தது. தலைவி தன் தோழியிடம் காட்டும் அன்பும், அவளது ஆலோசனைகளுக்குக் கொடுக்கும் மதிப்பும் அவளது சிறந்த சமூக ஆளுமையைக் காட்டுகிறது. இன்ப துன்பங்கள் அனைத்தையும் தோழியுடன் பகிர்ந்து கொண்டு, இக்கட்டான சூழலில் அவளது அறிவுரையின்படி செயல்படும் நிதானம் தலைவியிடம் இருந்தது. இத்தகைய குணங்கள் அனைத்தையும் எட்டுத்தொகை ஆசிரியர்கள் எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளனர் என்தை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**திருமணம் என்ற இலக்கு**

தலைமைக் குணங்களுள் ஒன்றே ஆளுந்திறன். தன் இலக்கில் வெற்றிப் பெறுவதற்காக பிறரை நல்வழியில் நெறிப்படுத்துகின்ற திறன் உடையவரே ஆளும் வகையினர் (சுரட்பெ வலிந). ஆளும் வகையினரின் இயல்பினை,

**"தம் இலக்குகளையும் விருப்பங்களையும் அடைவதில் மிகுந்த ஈடுபாடும் உண்மையான உழைப்பும் கொண்டவர். அதற்காகப் பிறரைப் பயன்படுத்திக் கொள்ளத் தயங்காதவர்கள்"**

**(இரா.காஞ்சனா, ஆளுமை வளர்ச்சியும் ஆளுமைக் கோட்பாடுகளும், ப.57 )**

என்று இரா. காஞ்சனா குறிப்பிடுகின்றார்.

இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள தலைவி வேறுபட்ட சூழல்களை ஆளும் திறன் படைத்தவள். ஆதலால், சூழலுக்கேற்ப பிறமாந்தர்களை ஆளுகின்ற ஆற்றலினைப் பெற்றுள்ளாள். தலைவியின் 'சிறைப்புறக் கூற்றுக்கள்' மற்றும் 'வாயில்மறுத்தல்'; போன்றவை அவளது ஆளும் திறனுக்குச் சான்றாகும்.

**"அணங்குடை நெடுவரை உச்சியின் இழிதரும்**
**குணம் கொள் அருவிக் கான் கெழுநாடன்**
**மணம்கமழ் வியல் மார்பு அணங்கிய செல்லல்**
**இதுஎன அறியா மறுவரற் பொழுதில்,**
**'படியோர்த் தேய்த்த பல் புகழ்த் தடக்கை**
**நெடுவேட் பேணத் தணிருவள் இவள்' என**
**முது வாய்ப் பெண்டிர் அது வாய் கூற**
**களம் நன்கு இழைத்து, கண்ணி சூடி**
**வள நகர் சிலம்பப் பாடி, பலி கொடுத்து,**
**உருவச் செந்தினை குரதியொடு தூஉய்..."**

**(அகம்.22:1-10)**

அகநானூறு, சிறைப்புறக் கூற்றில் தலைவியின் ஆளுந்திறனை வெளிப்படுத்துகின்றது. 'வரைவின் பொருட்டு பிரிந்து சென்ற தலைவன் வரைவினை நீட்டித்து இரவுக்குறியில் வந்து ஒழுகினான். இதனைத் தடுக்க எண்ணிய தலைவி அன்னை வெறியாட்டு நிகழ்த்த முற்படுவதை தோழியிடம் உரைப்பது போல தலைவனுக்கு உணர்த்துகின்றாள்'. திருமணம் என்ற இலக்கு தலைவியின் ஆளுந்திறனால் முடிக்கப்படுகின்றது.

**மாறுபடும் இயல்பு**

தன் இலக்கினை அடைய மாறுபட்ட கோணங்களில் தன் நடத்தையை செயல்படுத்துவதே 'மாறுபடும் இயல்பு' ஆகும். மாறுபடும் இயல்பினை உளநூலார்,

*Kalanjiyam International Journal of Tamil Studies*, Vol. 10 No. 02, September 2026,
https://doi.org/10.63300/kijts10sp02.2026.08

**“ஊக்கியால் தூண்டப்பட்ட ஒருவன் தன் குறிக்கோளை அடைவதற்கு ஒரே மாதிரியான நடத்தையில் ஈடுபடாமல் பல்வேறு செயல்களின் மூலம் குறிக்கோளை அடைய முயல்கிறான்.”**

**(தா.ஏ.சண்முகம், மு.நூ ப.227 )**

என்று குறிப்பிடுகின்றனர். தன் களவு வாழ்க்கையினை கற்பு வாழ்க்கையாக மாற்ற விரும்பிய தலைவி இத்தகைய மாறுபடும் இயல்பினை கையாளுகின்றாள்.

தலைவி செவிலியிடம் அறத்தொடு நிற்கவும், தலைவனிடம் தூதுக்கு செல்லவும் தோழியைத் தூண்டுகின்றாள்.

சிறைப்புறக் கூற்றின் வாயிலாக தலைவனைத் தூண்டுகின்றாள். தன் ஆற்றலால் பிற மாந்தர்களை நெறிப்படுத்துகின்ற ஆளுமை உடையவளாகத் தலைவி திகழ்கின்றாள். இவை மட்டுமின்றி பிற செயல்பாடுகளையும் தலைவி கையாளுகின்றாள் என்றே குறிப்பிடலாம்.

தன் இலக்கினை அடைய விலங்குகளின் அன்பை தலைவனுக்குச் சுட்டுதல், தலைவன் நாட்டைச் சார்ந்த மலை மற்றும் ஆற்றினைக் கண்டு பேசுதல், இயற்கையிடம் பேசுதல் மற்றும் தன் உடல் உறுப்பினை முன்னிறுத்தி மொழிதல் போன்றவை தலைவியின் மாறுபட்ட நடத்தையினைக் குறிப்பிடுவதாகும்.

தலைவியின் இத்தகைய செயல்பாடுகள் உளவியலாளர் குறிப்பிட்ட ‘மாறுபட்ட இயல்பினைச் ’ சுட்டுவதாக அமைகின்றது. தலைவனின் பிரிவினை ஆற்றாத தலைவி அவன் நாட்டைச் சார்ந்த மலையினின்று ஓடிவரும் ஆற்றினை நோக்கி பேசுகின்றாள்.

**“மென்தோள் நெகிழச் சாஅய், கொன்றை,**
**ஊழுறு மலரின் பாழ்பட முற்றிய**
**பசலை மேனி நோக்கி, நுதல்பசந்து,**
**இன்னேம் ஆகிய எம்இவண் அருளான்,**
**நும்மோன் செய்த கொடுமைக்கு, இம்மென்று,**
**அலமரல் மழைக்கண் தெண்பனி மல்க,**
**நன்றுபுற மாறி அகறல், யாழநின்**
**குன்றுகெழு நாடற்கு என் எனப்படுமோ?**
**கரைபொரு நீத்தம்! உரை’ எனக்கழறி,”**

**(அகம்.398:3-11)**

‘ஆற்றினை நோக்கி தலைவனால் தான் அடைந்த துன்பத்தினை குறிஞ்சி நிலத்தலைவி எடுத்துரைக்கின்றாள். மேலும் அறத்திற்கு புறமாதல் உன்நாட்டைச் சார்ந்த தலைவனுக்கு பொருந்துமோ?’ என்று குறிப்பிட்டு தலைவனின் மனநிலையை தன் மாறுபட்ட நடத்தையினால் மாற்ற முயல்கின்றாள்.

*Kalanjiyam International Journal of Tamil Studies*, Vol. 10 No. 02, September 2026,
https://doi.org/10.63300/kijts10sp02.2026.08

**காப்புணர்ச்சி**

வினையின் பொருட்டு பிரிந்து சென்ற தலைவன் காலம் தாழ்த்தியும், விரைவில் வருவான் என்று நம்பிக்கைக் கொள்கின்றாள். தலைவன் வரும் வரை தன்னால் ஆற்றியிருக்க முடியும் என்று தன்னம்பிக்கை கொள்கின்ற முறையே அவளது சார்பற்ற காப்புணர்வுத் திறனுக்கு தக்க சான்றாகின்றன. தலைவனின் நட்பு மீது கொண்ட நம்பிக்கையினால் தலைவி அடைகின்ற காப்புணர்வுத் திறனை குறு.170 வது பாடல் உணர்த்துகின்றது.

**"பலரும் கூறுக, அஃது அறியாதோரே**

**அருவி தந்த நாட்குரல் எருவை**

**கயம்நாடு யானை கவளம் மாந்தும்**

**மலைகெழு நாடன் கேண்மை**

**தலைபோகாமை, நற்கு அறிந்தனென், யானே"**

**(குறு.170)**

மலைநாட்டுத் தலைவனின் நட்பானது தெய்வத்தால் கிட்டியதாகும். ஆதலால் அழியாது என்றும் தொடரும் என்று நம்பிக்கை கொள்கின்றாள். தலைவி தன் மீதும், தலைவன் மீதும் கொண்டுள்ள தன்னம்பிக்கை உணர்வே அவளது சார்பற்ற காப்புணர்ச்சியாக பிரதிபலிக்கின்றது.

**துணிவு**

தலைவியின் ஆளுமைப் பண்புகளுள் ஒன்றே 'துணிவு' ஆகும். தலைவனைப் பிரிந்த ஆற்றாமையின் காரணமாக தலைவியின் துணிவாற்றல் வெளிப்படுகின்றது. துணிவு என்ற சொல்லிற்கு வேமன் தமிழ் - தமிழ் அகராதி,

**"திடன், துண்டு, நம்பிக்கை, நோக்கம், வெட்டு"**

**(கொற்றவை சகி.ஜெயஸ்ரீ, வேமன் தமிழ் -தமிழ் அகராதி, ப.666 )**

என்று பொருள் கொள்கின்றது. வினையின் பொருட்டு பிரிந்து சென்ற தலைவனின் பிரிவைத் தாங்காத பாலை நிலத்தலைவி தன் மனநிலையை துணிவாகத் தோழியிடம் எடுத்துரைக்கின்றாள்.

**"செழுமனை மறக்கும் செவ்வி வேனில்**

**தானே வந்தன்று ஆயின், ஆனாது**

**இலங்குவளை நெகிழ்ந்த எவ்வம் காட்டிப்**

**புலந்தனம் வருகம், சென்மோ – தோழி!**

**'யாமே எமியம் ஆக நீயே**

**போன்நயந்து அருளிலை யாகி,**

**இன்னை ஆகுதல் ஒத்தன்றால் எனவே" (அகம்.355:8-14)**

இனிய இளவேனிற் காலம் வந்தும் தலைவன் வரவில்லை. ஆதலால் வளை நெகிழும் தன் துன்பநிலையை எடுத்துரைத்து, 'தன் மீது அருள் இல்லாது சென்றவிடத்துத் தங்கி இருந்தாய். இவ்வாறு இருத்தல் நின் தகுதிக்கு தகுமோ?' என்று தலைவன் இருக்கும் இடம் சென்று ஊடி வருவோம் என்று தன் ஆற்றாமை மீதூர உரைக்கின்றாள். இப்பாடல் தலைவியின் ஆற்றாமையை உரைப்பது போல் இருப்பினும் அவளது துணிவினை புலப்படுத்துவதாக அமைகின்றது. மேலும் இதேப்போல் தலைவனை நாடிச் செல்லும் நோக்குடன் பாலை நிலத்தலைவி திகழ்வதை அகம் 309 வது பாடல் குறிப்பிடுகின்றது.

வினைக்காக தலைவன் செல்லும் போது தலைவியை உடன் அழைத்துச் செல்லுதல் மரபன்று. மேலும் தலைவனைத் தேடியும் தலைவி செல்வதில்லை. இத்தகைய மரபினை தனது துணிவான ஆளுமைத் திறனால் கட்டுடைப்பவளாக அக இலக்கியத் தலைவி திகழ்கின்றாள்.

**இயல்பூக்கங்கள்**

இயல்பூக்கக் கொள்கையை மிக்டுகல் எனும் அறிஞர் விவரிக்கின்றார். இக்கொள்கை மனிதனின் நடத்தைக்கான காரணத்தை உணர்த்துவதாக அமைகின்றது. குழந்தை பிறக்கும் போதே இயல்பூக்கமானது உருவாகி விடுகின்றது. இயல்பூக்கம் பற்றி பெ.வெங்கட்டம்மாள் என்பவர்,

**"ஒவ்வொரு இயல்பூக்கமும் ஒரு குறிப்பிட்ட மன வெழுச்சியை உண்டாக்குகிறது.**

**(பெ.வெங்கட்டம்மாள், பொது உளவியல்,ப.154)**

என்று தன் நூலில் குறிப்பிடுகின்றார். மனிதனிடம் இயல்பூக்கம் உருவாகின்ற மனவெழுச்சியை இரண்டு விதமாக குறிப்பிடப்படுகின்றன.

**வாழத் தூண்டும் இயல்பூக்கம்**

இன்ப நாட்டத்தை மையமாகக் கொண்டதே வாழத்தூண்டும் இயல்பூக்கம் ஆகும். இவ்வியல்பூக்கத்தால் மனிதனிடம் இன்பம் மற்றும் ஆசைகள் தோன்றுகின்றன. இத்தகைய இன்ப ஆசைகள் வயிற்றுப்பசி, பணப்பசி, பாலியல் தாக்கம் ஆகியவற்றின் வடிகாலாக தோன்றுகின்றன. இவற்றை நிறைவு செய்ய மனிதன் விரும்புகின்ற உணர்வே வாழத்தூண்டும் இயல் பூக்கமாக உருமாறுகின்றது. அகஇலக்கியத் தலைவியிடம் இத்தகைய மனஉணர்வானது காணப்படுகின்றது.

தலைவனுடன் வாழ விரும்புதல், செலவின் போது தன்னையும் அழைத்துச் செல்ல வேண்டுதல், பிரிவின் போது தலைவன் விரைவில் வருவான் என்று ஆற்றியிருத்தல், தலைவனுடன் தான் அடைந்த இன்பத்தை நினைத்துப் பார்த்தல் மற்றும் வரைவிற்காகத் தலைவனையும், தோழியையும் தூண்டுகின்ற முறைகளிலும் அகஇலக்கியத் தலைவியின் வாழத் தூண்டும் இயல்பூக்கமானது (டுகைந ஐளெவinஉவ) புலப்படுகின்றது

*Kalanjiyam International Journal of Tamil Studies*, Vol. 10 No. 02, September 2026,
https://doi.org/10.63300/kijts10sp02.2026.08

தலைவன் தன்னை பிரிந்து செல்லக் கூடாது என்னும் உணர்வால் தூண்டப்;பட்ட தலைவியின் வாழத் தூண்டும் இயல்பூக்கமானது பாலைக்கலி 6 மற்றும் 20 போன்ற பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**"அனை அரும் வெம்மைய காடு? எனக் கூறுவீர்!**
**கனை கழிகல்லாத கல் பிறங்கு ஆர் இடை,**
**பணை எருத்து எழில் ஏற்றின் பின்னர்ப்**
**பிணையும் காணிரோ? பிரியுமோ, அவை யே?"**

**(கலி.20:21-25)**

பிரிவினை உணர்த்திய தலைவனிடத்து தன்னையும் உடன் அழைத்துச் செல்லுமாறு தலைவி குறிப்பிடுகின்றாள். கலைமானைத் தொடர்ந்து செல்லும் பிணைமானைச் சுட்டிக்காட்டி தன்னையும் அழைத்துச் செல் என்று குறிப்பிடும் பாலைநிலத் தலைவியின் கூற்றானது அவளது வாழத்தூண்டும் இயல்பூக்கத்தை உணர்த்துகின்றது. தன் இயல்பூக்கத்தால் தலைவனின் உள்ளத்தையும் தூண்டுகின்றாள்.

தலைவனுடன் வாழ வேண்டும் என்ற வேட்கையினைக் கொண்டவளாக மருதநிலத்தலைவி திகழ்கின்றாள். அவளது வேட்கையுணர்வு தலைவனிடத்து நம்பிக்கையை உண்டாக்குகின்றது. மருதநிலத் தலைவியின் வாழத் தூண்டும் இயல்பூக்கத்தை,

**"ஆம்பிற் பூவின் சாம்பல் அன்ன**
**கூம்பிய சிறகர் மனைஉறை குரீஇ**
**முன்றில் உணங்கல் மாந்தி, மன்றத்து**
**எருவின் நுண்தாது குடைவன ஆடி,**
**இல்இறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்**
**புன்கண் மாலையும், புலம்பும்**
**இன்றுகொல் - தோழி! அவர் சென்ற நாட்டே!" (குறு.46)**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. தன்னை வாட்டும் மாலைப்பொழுது தலைவன் சென்ற நாட்டிலும், தன்னைப் பிரிந்த துயரும் தலைவனுக்கும் உள்ளது. ஆதலால் தலைவன் விரைவில் வருவார் என்று நம்பிக்கை கொள்கின்றாள்.

இவ்விரு பாடல்களும் தான் தலைவனுடன் இன்பமாக வாழ வேண்டும் என்ற தலைவியின் உணர்வினை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. இத்தகைய இன்ப உணர்வே உளவியலாளர் குறிப்பிடுகின்ற வாழத்தூண்டும் இயல்பூக்கம் ஆகும்.

**இறப்பு இயல்பூக்கம்**

'சாகத் துணிந்தவனுக்கு கடல்நீரும் கால்மட்டம்' என்பர். மனம் ஒன்றை நினைத்து அவை நிறைவேறாத பொழுது உயிர் நீக்கும் எண்ணம் ஏற்படுகின்றது. இத்தகைய மனவெழுச்சியே இறப்பு இயல்பூக்கம் எனப்படும். இறப்பு இயல்பூக்கத்தை,

**"விதியின் வலிமையை ஏற்றுத் தவிர்க்க இயலாத விளைவான சாவையும் எதிர்கொள்ளும் துணிச்சலே இறப்பு இயல்பூக்கம்."**

**(இரா.காஞ்சனா, இலக்கியமும் உளவியலும்,ப.34 )**

என்று குறிப்பிடுகின்றன. இக்கூற்றின் அடிப்படையில்; இறப்பு இயல்பூக்கமானது துணிச்சலான ஒரு செயலாகவே கருதப்படுகின்றன.

அகஇலக்கியத் தலைவி தன் மனஆற்றாமையை இறப்பு இயல்பூக்கம் வழியாக புலப்படுத்துகின்றாள். ஆற்றாமையை புலப்படுத்துவதன் வாயிலாக தன் காரியத்தை சாதித்துக் கொள்வதற்கும் இவ்வியல் பூக்கத்தைக் கையாளுகின்றாள். தலைவி பிரிவுத்துயரை தாங்காது தோழியிடம் தன் மனநிலையை உரைப்பதாக குறு.103 மற்றும் அகம்.157 போன்ற பாடல்கள் அமைகின்றன.

**"கடும்புனல் தொடுத்த நடுங்கு அஞுர்அள்ளல்,**

**கவிர் இதழ் அன்ன தூவிச் செவ்வாய்,**

**இரைதேர் நாரைக்கு எவ்வம் ஆகத்**

**தூஉம் துவலைத் துயர்கூர் வாடையும்**

**வாரார் போல்வர், நம் காதலர்,**

**வாழேன் போல்வல் - தோழி! யானே" (குறு.103)**

தலைவன் வருவதாக உரைத்த கார்பருவம் கடந்து கூதிர்ப்பருவம் வருகையுற்ற பின்பும் தலைவன் வரவில்லை. வாடை தனக்கு துன்பத்தை உண்டாக்குகின்றது. பிரிவுக் காலம் நீட்டித்தமையால் தான் உயிர் வாழ மாட்டேன் என்று நெய்தல்நிலத் தலைவி குறிப்பிடுகின்றாள். இஃது தலைவியின் ஆற்றாமையால் நிகழ்ந்த கூற்றாக இருப்பினும் தோழியின் மனதை செயற்படுத்தக் கூடிய ஆற்றலை அளிப்பதாகும்.

சிறைப்புறமாக உள்ள தலைவனின் உள்ளத்தை அசைக்கும் வண்ணம் தலைவி சுட்டுகின்ற இறப்பு இயல்பூக்கத்தை,

**"இலங்கு வளை நெகிழச் சாஅய், யானே,**

**உளனே வாழி – தோழி! – சாரல்**

**தழைஅணி அல்குல் மகளிருள்ளும்**

**விழவு மேம்பட்ட என்நலனே, பழவிறல்**

**பறை வலம் தப்பிய பைதல் நாரை**

**திரைதோய் வாங்குசினை இருக்கும்**

**தண்ணம் துறைவனொடு கண்மாறின்றே"(குறு.125)**

என்ற பாடலடியால் அறியலாம். வரைவினை தலைவன் நீட்டிப்பதாயின் தான் இறந்துபடுவேன் என்பதை நுட்பமாக தோழியிடம் உரைக்கின்றாள். தலைவியின் இறப்பு இயல்பூக்கம் சிறைப்புறமாக உள்ள தலைவனின் மனதை ஆட்கொள்கின்றது. வரைவு பற்றி தலைவன் சிந்திப்பதற்கு இறப்பு இயல்பூக்கத்தை ஏதுவாகக் கையாளுகின்றாள்.

இவ்விரு பாடல்களும் நெய்தல் நிலத்தலைவியின் இறப்பு இயல்பூக்கத்தைச் சுட்டுகின்றது. இறப்பு இயல்பூக்கத்தால் தலைவி தன் ஆற்றாமையை புலப்படுத்துவதோடு தோழி மற்றும் தலைவனை சிந்திக்கவும் தூண்டுகின்றாள்.

**ஒத்துழைக்கும் ஆற்றல்**

ஒரு காரியத்தில் நாம் வெற்றி பெற வேண்டுமெனில் பிறருடன் ஒத்துழைத்துச் செல்லுதல் வேண்டும். ஒத்துழைத்துச் செல்லும் ஆற்றல் பிறருடன் சுமூகமான உறவினை மேற்கொள்வதற்கு ஏதுவாகின்றது. பலர் கூடி மனமொத்து வாழ்கின்ற திறனை ஒத்துழைக்கும் ஆற்றல் அளிக்கின்றது.

தலைவி தன்னைச் சூழ்ந்துள்ள மாந்தர்களின் மனநிலைக்கு ஏற்ப ஒத்துழைக்கின்ற திறனுடையவளாவாள். அன்னையின் இற்செறிப்புக்கு ஒத்துப்போதல், தோழி மற்றும் தலைவனுக்கு வாயில் ஏற்கும் நிலை, தலைவனிடம் ஊடலைத் தீர்க்கின்ற நிலை போன்ற சூழல்களில் எல்லாம் தலைவி ஒத்துழைத்துச் செல்கின்றாள். தலைவியின் ஒத்துழைக்கும் ஆற்றலினை கெம்ப் குறிப்பிடும் ஆளுமைத்திறனான, 'தம் சூழ்நிலைக்கேற்ப ஏற்படுத்திக் கொண்ட பொருத்தப் பாட்டுடன்' ஒப்பிடலாம். இவ்வாறே தலைவி தன் சூழலுக்கு ஏற்ப ஏதேனும் ஒரு நிலையினை கையாளுபவளாகத் திகழ்கின்றாள். பரத்தமை ஒழுக்கத்தை மேற்கொண்ட தலைவனிடம் ஊடலைத் தீர்த்து ஒத்துழைக்கும் திறனுடையவளாக மருதநிலத் தலைவி திகழ்கின்றாள்.

**"யாமும் காதலம், அவற்கு' எனச் சாஅய்**

**சிறுபுறம் கவையினனாக, உறுபெயல்**

**தன் துளிக்கு ஏற்ற பல உழுசெஞ்செய்**

**மன் போல் நெகிழ்ந்து, அவற் கலுழ்ந்தே**

**நெஞ்சு அறைபோகிய அறிவினேற்கே?" (கலி.26:22-26)**

பரத்தையிடமிருந்து பிரிந்து வந்த தலைவனிடம் ஊடல் கொண்டு புதல்வனை நோக்கி தலைவி நகர்ந்தாள். அச்சமயம் தலைவன் புதல்வனின் மீது தானும் அன்புடையோரே என்று புதல்வனைத் தழுவினான். இச்சொல்லினைக் கேட்ட தலைவியின் உள்ளம் செம்மையான வயலின் மண்ணைப் போல தன் நெஞ்சமானது நெகிழ்ந்தது என்று ஊடலினைத் தீர்த்துக் கொள்கின்றாள். இங்ஙனம்

தலைவி ஒத்துழைத்துச் செல்கின்ற முறையினால் தன் இல்லற வாழ்வில் சுமூகமான உறவினை மேம்படுத்துபவளாகத் திகழ்கின்ற முறையினை அறிய முடிகின்றது.

**கொள்கை வழி நிற்கும் திறன்**

'கருமமே கண்ணாய் இரு' என்பர். எச்சூழலிலும் தனது கொள்கைகளிலிருந்து விலகாத தன்மையினைப் பெற்றிருத்தலே சிறந்த ஆளுமையாகும். ஆளுமைவாதி மனம் தளராது தான் அடைய வேண்டிய இலக்கை மட்டுமே சிந்திப்பவராக செயல்படுவர். அகஇலக்கியத் தலைவி தம் கொள்கையை எச்சூழலிலும் மாற்றிக் கொள்ளாதவளே ஆவாள். இற்செறித்தல் மற்றும் நொதுமலர் வரைவு போன்ற கடுமையான சூழலிலும் தனது இலக்கினை மாற்றி அமைத்துக் கொள்ளாதவளே ஆவாள். தலைவியின் உடல்வேறுபாடு கண்டு அன்னையால் இற்செறிக்கப்பட்ட தலைவி சற்றும் தன் கொள்கையில் விலகாது திகழ்கின்ற முறையினை குறு.401 வது பாடல் குறிப்பிடுகின்றது.

**"அடும்பின் ஆய்மலர் விரைஇ, நெய்தல்**
**நெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்**
**ஓரை மகளிர் அஞ்சி, ஈர் ஞெண்டு**
**கடலில்பிரிக்கும் துறைவனொடு, ஒருநாள்,**
**நக்கு விளையாடலும் கடிந்தன்று,**
**ஐதே கம்ம, மெய்தோய் நட்பே!" (குறு.401)**

தலைவியின் களவினை அறிந்த ஊர்மக்கள் அலரினைத் தூற்றினர். அலரினால் அன்னை அவளை இற்செறித்தனர். அன்னை தன்னை இற்செறித்ததால் தலைவனைக் காண முடியாது வருந்தினாள். தலைவியின் இத்தகைய மனஉணர்வு அவளது உள்ளத்தைப் புலப்படுத்துகின்றது. காப்பு மிகுதியோ அல்லது ஊர் மக்களின் அலரோ தலைவியின் உள்ளத்தை சற்றும் அசைக்கவில்லை என்பதனையும் இப்பாடல் உணர்த்துகின்றது.

**தகவல் பரிமாற்றும் திறன்**

தன் கருத்தை பிறர் புரிந்து கொள்ளுமாறு உணர்த்துவதே 'தகவல் பரிமாற்றும் திறன்' ஆகும். இவ்வாற்றலை உடையோர் தகவலை தெரிவிப்பதில் ஒரு நேர்த்தியும், புரிதலும் உடையவராக இருப்பர். தகவல் பரிமாற்றத்தின் நோக்கமானது,

**"தொடர்பு கொள்வதின் நோக்கம் நம் மனதிலுள்ள எண்ணத்தையோ, வேண்டுகோளையோ, பரிந்துரையையோ, கட்டளையையோ உரியவருக்குத் தெரிவித்து அதனை நிறைவேற்றிக் கொள்ளல்."17**

**(எஸ்.சுந்தர சீனிவாசன்,ஆளுமை மேம்பாடு,ப.82)**

என்ற முறைகளில் குறிப்பிடப்படுகின்றது. அகஇலக்கியத் தலைவி சூழலுக்கு ஏற்ப நேர்த்தியாக தகவலை பரிமாற்றம் செய்யக் கூடிய ஆற்றலினை பெற்றுள்ளாள்.

பகல் மற்றும் இரவுக்குறியினை மறுத்து வரைவுகடாதலின் போதும் அன்னை இற்செறித்த போதும் சிறைப்புறமாக தன் கருத்தை தலைவனுக்கு எடுத்துரைக்கும் போதும் பரத்தைப் பிரிவின் போதும் வாயில் நேரும் தலைவனுக்கு வாயிலினை மறுக்கின்ற போதும் அகஇலக்கியத் தலைவி நுட்பமாகத் தன் நிலையை தலைவனுக்கு உணர்த்துகின்றாள். தலைவியின் இத்தகைய ஆற்றல் அவளது தகவல் பரிமாற்றும் திறனை புலப்படுத்துவதற்கு சான்றாகின்றது.

இற்செறிப்பின் போது தன் மனநிலையை தலைவனுக்கு உணர்த்தும் குறிஞ்சி நிலத்தலைவியின் ஆற்றலை அகம்.52 வது பாடல் பதிவு செய்துள்ளது.

**"…. அன்னைக்கு**

**அறிவிப்பேம் கொல்? அறியலெம்கொல்?' என**

**இருபாற் பட்ட சூழ்ச்சி ஒருபால்**

**சேர்ந்தன்று – வாழி, தோழி! – யாக்கை**

**இன்உயிர் கழிவது ஆயினும், நின்மகள்**

**ஆய்மலர் உண்கண் பசலை**

**காம நோய்' எனச் செப்பாதீமே…"  (அகம்.52)**

என் உடம்பில் தோன்றிய பசலைக்கு தலைவன் மீது கொண்ட காமமே காரணம் என்ற உண்மையை உரைக்காதே என்று சிறைப்புறம் நிற்கும் தலைவன் அறியுமாறு குறிப்பிடுகின்றாள். தலைவியின் உடல் துன்பத்திற்கு தானே காரணம் என்பதை தலைவன் உளமறியும் வண்ணம் குறிஞ்சிநிலத்தலைவி நுட்பமாக உரைக்கின்றாள். தலைவியின் இவ்வாற்றல் அவளது தகவல் பரிமாற்றும் திறனை உணர்த்துகின்றது.

**தன் உணர்வை புலப்படுத்தும் ஆற்றல்**

ஆளுமைத் திறனில் மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்று 'தன் உணர்வை பிறருக்குப் புலப்படுத்துவதாகும்;'. தன் மனஉணர்வை பிறர் உணரும் வண்ணம் நேரடியாகவோ (அ) மறைமுகமாகவோ புலப்படுத்துகின்ற ஆற்றலே ஆளுமைப்பண்பின் சிறப்பாகும். அக இலக்கியத் தலைவி தன் மன உணர்வை மிகச்சிறப்பாக ஏனைய மாந்தர்களுக்கு உணர்த்துகின்றாள்.

நெஞ்சோடு கிளத்தல், பருவம் கண்டு உரைத்தல், இயற்பட மொழிதல், வாயில் மறுத்தல், ஊடல் கொள்ளல் மற்றும் ஊடலினைத் தீர்த்தல் என்ற முறைகளில் தலைவி தன் மன உணர்வை புலப்படுத்துகின்றாள். தலைவியின் ஆற்றாமை மொழிகள் அவளது ஆழ்ந்த மன உணர்வினை புலப்படுத்துகின்றது.

தலைவனுக்கு வாயில் மறுக்கின்ற மருதநிலத் தலைவி தன் மனநிலையை தோழிக்கு உணர்த்துவதாக கலி.67 வது பாடல் அமைகின்றது.

**"நலத்தகை, எழில் உண்கண் நல்லார்தம் கோதையால்**

**அலைத்தபுன் வடுக்காட்டி, அன்பின்றிவரின் - எல்லா!**

**புலப்பேன்யான் என்பேன்மன்? அந்நிலையை அவற்காணின்**

**கலப்பேன் என்னும்இன் கையறு நெஞ்சே**

**கோடுஎழில் அகல்அல்குல் கொடியன்னார் முலைமூழ்கிப்**

**பாடுஅழி சாந்தினன், பண்பின்றி வரின் - எல்லா!**

**ஊடுவேன் என்பேன்மன்? அந்நிலையே, அவற்காணின்**

**கடுவேன்என்னும்,இக்கொள்கைஇல் நெஞ்சே"(கலி.67:6-13)**

மருதநிலத் தலைவி தலைவனின் பரத்தமைச் செயலால் கோபித்து ஊடல் கொள்ள வேண்டும் என்று எண்ணுகின்றாள். ஆனால் தலைவனைப் பார்த்தவுடன் தனது உள்ளம் செய்வதறியாது அவன் மீதே ஆசை கொள்கின்றது என்று தனது கலங்கிய மனநிலையை புலப்படுத்துகின்றாள். குறு.41 வது பாடலில் தலைவி தன் மனஉணர்வை புலப்படுத்துகின்ற ஆற்றலை,

**"காதலர் உழையர் ஆகப் பெரிது உவந்து**

**சாறுகொள் ஊரின் புகல்வேன், மன்ற**

**அத்தம் நண்ணிய அம்குடிச் சீறூர்**

**மக்கள் போகிய அணில் ஆடு முன்றிற்**

**புலப்பில் போலப் புல்லென்று**

**அலப்பென் தோழி! அவர் அகன்ற ஞான்றே" (குறு.41)**

என்ற பாடலடியால் அறியலாம். தலைவனின் மீது கொண்டுள்ள அன்பினை புலப்படுத்தும் வண்ணம் தன் மன உணர்வை பாலைநிலத் தலைவி நுட்பமாக வெளிப் படுத்துகின்றாள். தலைவன் அருகில் உள்ள போது விழாக் கொண்ட ஊரினைப் போல மகிழ்ந்தும், பிரிவின் போது அணில் விளையாடுகின்ற முற்றத்தைப் போல பொலிவிழந்து வருந்துகின்ற இயல்பினை உடையவளாகத் தலைவி திகழ்கின்றாள். இங்ஙனம் தலைவி தனது மாறுபட்ட மனஉணர்வினை புலப்படுத்துகின்றாள்.

**முடிவுரை**

எட்டுத்தொகை காட்டும் சங்ககாலத் தலைவி அன்பில் மென்மையானவளாகவும், கடமையிலும் இல்லற நிர்வாகத்திலும் திறமையானவளாகவும்இ தன் உரிமைகளிலும் சுயமரியாதையிலும் ஆளுமை மிக்க வீரப் பெண்ணாகவும் திகழ்ந்துள்ளாள். எட்டுத்தொகைப் பாடல்களில் தலைவிக்கு குரலும் கருத்தும் முடிவெடுக்கும் ஆற்றலும் வழங்கப்பட்டுள்ளன. அவள் காதலிக்கிறாள், எதிர்பார்க்கிறாள், மறுக்கிறாள், ஊடுகிறாள், அறிவுறுத்துகிறாள், தன் மனநிலையை வெளிப்படுத்துகிறாள். எனவே சங்ககாலத் தலைவி வெறும் காதல் பாத்திரமாக அல்லாமல் சிந்திக்கும், உணரும், முடிவெடுக்கும் தனித்துவமான ஆளுமை கொண்ட பெண்ணாக விளங்குகிறாள். எட்டுத்தொகை காட்டும் சங்ககாலத் தலைவி அன்பு, கற்பு, அறிவு, நுண்ணுணர்வு, தன்னம்பிக்கை,

துணிவு, பொறுமை, பொறுப்புணர்வு, சமூகப் பண்புணர்வு ஆகிய பல்வேறு பண்புகளின் ஒருங்கிணைந்த வடிவமாகத் திகழ்கிறாள் இதனால் சங்ககாலப் பெண் உணர்வும் அறிவும் தன்னுணர்வும் கொண்ட முழுமையான ஆளுமை உடையவளாக இருந்ததை எட்டுத்தொகை வழி அறியலாம்.

**ஆய்வுக்குத் துணை செய்த நூல்கள்**

[1.] இரா.காஞ்சனா, ஆளுமை வளர்ச்சியும் ஆளுமைக் கோட்பாடுகளும் – விஷ்ணுப்பிரியா பதிப்பகம் - எஸ்.பி.ஜி.பிரிண்டர்ஸ் - மதுரை – 19. முதற்பதிப்பு – ஜனவரி 2015,

[2.] சண்முகம். தா.ஏ உளவியல் இரண்டாம் பாகம், தி.தெ.சை.சி.நூ கழக வெளியீடு- திருநெல்வேலி, 1980.

[3.] கொற்றவை சகி.ஜெயஸ்ரீ, வேமன் தமிழ் -தமிழ் அகராதி - ஹரிஹரன் பதிப்பகம்-வைகை பிரிண்டர்ஸ் ரூ பப்ளிசர்ஸ்-மதுரை=முதற்பதிப்பு – 2004, நவம்பர்.

[4.] பெ.வெங்கட்டம்மாள், பொது உளவியல் - ஹரிஹரன் பதிப்பகம்-வைகை பிரிண்டர்ஸ் ரூ பப்ளிசர்ஸ்-மதுரை=முதற்பதிப்பு – 2004, நவம்பர்.

[5.] இரா.காஞ்சனா, இலக்கியமும் உளவியலும் - விஷ்ணுப்பிரியா பதிப்பகம் -எஸ்.பி.ஜி.பிரிண்டர்ஸ் - மதுரை – 19. முதற்பதிப்பு – ஜனவரி 2015,

[6.] எஸ்.சுந்தர சீனிவாசன்,ஆளுமை மேம்பாடு- தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்-41-டீ, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், முதல் பதிப்பு, சென்னை, 2008.

[7.] செயபால்.இரா (உ.ஆ) -அகநானூறு-(முதல் மற்றும் இரண்டாம் தொகுதி) (மூலமும் உரையும்) -நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,-41– பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,அம்பத்தூர்,முதல் பதிப்பு, ஏப்ரல், 2004.சென்னை – 600 098.

[8.] நாகராசன்.வி (உ.ஆ) -குறுந்தொகை-(முதல் மற்றும் இரண்டாம் தொகுதி) (மூலமும் உரையும்)-நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41 –பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர்-முதல் பதிப்பு, ஏப்ரல், 2004. சென்னை – 600 098.

[9.] விசுவநாதன்.அ (உ.ஆ) -கலித்தொகை-(முதல் மற்றும் இரண்டாம் தொகுதி) (மூலமும் உரையும்)-நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41 –பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்-அம்பத்தூர், முதல் பதிப்பு-ஏப்ரல், 2004. சென்னை – 600 098.

**ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று**

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.

KALANJIYAM